ஆரம்பக்கல்வி



தரம் 03 மாணவர்களுக்கான மொழிப்பயிற்சிகள்

ஆக்கம் - R.நிரோஜ்

www.ikbu.lk

0771766376
nirojh31@gmail.com

ஆசிரியரிடமிருந்து :

இக்கையேடானது, தரம் 03 இல் கல்வி பயிலும் மாணவர்களின் மொழி அறிவினை விருத்தி செய்யும் நோக்கத்துடனும், தரம் 05 இல் மாணவர்கள் எதிர்நோக்குகின்ற புலமைப்பரிசில் பரீட்சையின் தமிழ் பகுதிக்கு இலகுவான முறையில் விடையளிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்கள் சுயமாக படித்து தெளிவு பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தரம் 03 தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டியின் சகல பயிற்சிகளும் இணைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் இதனை முறையாகப் பயன்படுத்தி தெளிவு பெறுவீர்களாக.

www.lkedu.lk

R.நிரோஜ்
இ/பலா/பின்னவலை.த.ம.வி

தமிழ் எழுத்துக்கள்



	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

ஆய்த எழுத்து

www.ikeyu.lk

- பெற்றோருக்கான அறிவுறுத்தல்.
- (மாணவர்களை முறையாக வழிநடத்துங்கள்)

சரியான கொண்ணிலையில் அமர்தல்


முதுகு நேராக இருக்க வேண்டும். முகம் கடதாசிக்கு மிக அண்மித்து இருந்தலாகாது.

வயிறு மேசையில் முட்டுதலாகாது.




பிள்ளை தன் கால் பாதத்தை நிலத்தில் முழுமையாக வைக்கத் தக்கதாகக் கதிரையின் உயரமும் இருத்தல் வேண்டும்.

- பென்சிலை உரியவாறு பிடித்தல்



பென்சிலை நடுவிரல், சுட்டுவிரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு அதற்கான பயிற்சியையும் வழங்குங்கள்.

- அப்பியாசக் கொப்பியை வைத்திருக்கும் முறை



www.ikeau.lk

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

- லகர, ளகர, ழகர வேறுபாடு

- பலம் - உறுதி
- பழம் - கனி

- மலை - குன்று
- மழை – மாரி (பெய்யும் மழை)

- கிலி – பயம்
- கிளி – பறவை
- கிழி – கிழித்தல்

- ஒலி – ஓசை
- ஒளி – பிரகாசம்
- ஒழி – நீக்கு

- அலகு – சொண்டு
- அளகு – கோழி
- அழகு – வடிவு

- வலி – ஒருநோய், வலித்தல்
- வளி – காற்று
- வழி – பாதை

- வால் - ஒரு உறுப்பு
- வாள் - ஒரு ஆயுதம்
- வாழ் - வாழ்தல்

- விளா – ஒரு மரம்
- விழா – கொண்டாட்டம்

- வெல்லம் - இனிப்பு
- வெள்ளம் - வெள்ளப்பெருக்கு

www.lkedu.lk

• ரகர, றகர ஒலி வேறுபாடு

- அரம் - ஒரு ஆயுதம்
- அறம் - தர்மம்

- அரை - இரண்டில் ஒன்று
- அறை - இல்லத்தின் ஒரு பகுதி

- கரி – அடுப்புக் கரி, யானை
- கறி – உணவு வகை

- கரை – கடற்கரை
- கறை – கறை படிதல்

- கூரை – வீட்டின் மேற்பகுதி
- கூறை – சேலை

- நிரை – வரிசை
- நிறை – பாரம், நிரப்பு

- பரவை – கடல்
- பறவை – பட்சி

- பாரை – ஒரு மீன், ஒரு கருவி
- பாறை – கற்பாறை

• னகர, ணகர ஒலி வேறுபாடு

- அன்னம் - சோறு
- அண்ணம் - உள்நாக்கு

- ஆனி – ஒரு மாதம்
- ஆணி - இரும்பு ஆணி

- ஊன் - இறைச்சி
- ஊண் - உணவு

www.lkedu.lk

- கனை – ஒலி
- கணை – அம்பு

- பனி – குளிர்
- பணி – தொழில்

- பானம் - நீராகாரம்
- பாணம் - அம்பு

- மனம் - உள்ளம்
- மணம் - வாசைன

- வானம் - ஆகாயம்
- வாணம் - மத்தாப்பூ

- ஒருமைப் பன்மை சொற்கள்

ஒருமை	பன்மை
பழம்	பழங்கள்
குதிரை	குதிரைகள்
நாய்	நாய்கள்
விமானம்	விமானங்கள்
கிளி	கிளிகள்
புத்தகம்	புத்தகங்கள்
முட்டை	முட்டைகள்
மான்	மான்கள்

www.lkedu.lk

- ஒத்தகருத்துச் சொற்கள்

அரசன்	மன்னன்
ஆறு	நதி
நாடு	தேசம்
கடல்	சமுத்திரம்
ஆகாயம்	வானம்
ஒளி	வெளிச்சம்
வீதி	தெரு
சூரியன்	கதிரவன்
விளக்கு	தீபம்
குளம்	வாவி

- எதிர்கருத்துச் சொற்கள்

இயற்கை	செயற்கை
இன்பம்	துன்பம்
தொடக்கம்	முடிவு
நன்மை	தீமை
ஒற்றுமை	வேற்றுமை
சிரிப்பு	அழுகை
வெற்றி	தோல்வி
மாரி	கோடை
சுத்தம்	அசுத்தம்
காடு	நாடு
புதுமை	பழைமை
வீரன்	கோழை

www.lkedu.lk

- **எதிர்பாற் சொற்கள்**

மாதா	**பிதா**
அரசன்	**அரசி**
மகன்	**மகள்**
தோழன்	**தோழி**
சகோதரன்	**சகோதரி**
நடிகன்	**நடிகை**
மூத்தவன்	**மூத்தவள்**
பெரியப்பா	**பெரியம்மா**
புதல்வன்	**புதல்வி**
பேரன்	**பேர்த்தி**
பாடகன்	**பாடகி**
தலைவன்	**தலைவி**

- **அடைமொழிச்சொற்கள்**

ஒரு சொல்லை சிறப்பித்துக் கூறுவதற்காக பயன்படுத்தப்படுவது அடைமொழி ஆகும்.

எழுவாய் அடைமொழி

எழுவாய் அடைமொழி என்பது ஒரு வாக்கியத்தின் எழுவாயைச் சிறப்பித்து வரும் சொல்லாகும்.

எடுத்துக்காட்டு : **வெள்ளை** முயல் துள்ளி ஓடியது.

இவ்வாக்கியத்தின் எழுவாய்ச் சொல்லான முயல் என்பது **வெள்ளை** முயல் என சிறப்பிக்கப்படுவதால், **வெள்ளை என்ற சொல் எழுவாய் அடைமொழியாகும்.**

www.lkedu.lk

பயனிலை அடைமொழி

பயனிலை அடைமொழி என்பது ஒரு வாக்கியத்தின் பயனிலையைச் சிறப்பித்து வரும் சொல்லாகும்.

எடுத்துக்காட்டு : பறவைகள் **கூட்டமாகப்** பறந்தன.

இவ்வாக்கியத்தின் பயனிலைச் சொல்லான பறந்தன என்பது **கூட்டமாகப்** பறந்தன என்று சிறப்பிக்கப்படுவதால், **கூட்டமாக என்ற சொல் பயனிலை அடைமொழியாகும்.**

01. முயல் ஓடியது.
வெள்ளை முயல் ஓடியது.
வெள்ளை முயல் **வேகமாக** ஓடியது.

02. கிளி பறந்தது.
பச்சைக் கிளி பறந்தது.
பச்சைக் கிளி **வேகமாக** பறந்தது.

03. பூனை எலியைப் பிடித்தது.
கறுத்தப் பூனை எலியைப் பிடித்தது.
கறுத்தப் பூனை **சிறிய** எலியைப் பிடித்தது.

04. நாய் குரைத்தது.
வெள்ளை நாய் குரைத்தது.
வெள்ளை நாய் **பாய்ந்து** குரைத்தது.


05. குதிரை ஓடியது.
சாம்பல் நிறக் குதிரை ஓடியது.
சாம்பல் நிறக் குதிரை **வேகமாக** ஓடியது.

www.ikedu.lk

காலம்

காலம் மூன்று வகைப்படும். அவையாவன,

01.இறந்தகாலம்
02.நிகழ்காலம்
03. எதிர்காலம்



எடுத்துக்காட்டு –

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
வரைந்தாள்	வரைகிறாள்	வரைவாள்
பாடினாள்	பாடுகிறாள்	பாடுவாள்
ஓடினாள்	ஓடுகிறாள்	ஓடுவாள்
வாசித்தாள்	வாசிக்கின்றாள்	வாசிப்பாள்
சென்றாள்	செல்கின்றாள்	செல்வாள்
வந்தான்	.....	.....
.....	சாப்பிடுகிறாள்	.....
.....	.....	பறக்கும்

www.lkedu.lk

நிறுத்தக்குறிகள்

01. முற்றுப்புள்ளி - (.)
02. காற்புள்ளி - (,)
03. வினாக்குறி - (?)

01. முற்றுப்புள்ளி (.)

வாக்கிய **முடிவைக்** காட்டுவது **முற்றுப்புள்ளி** ஆகும்.

எடுத்துக்காட்டு :

1. காலையில் சூரியன் உதித்தது.
2. மாலா ஓவியம் வரைந்தாள்.
3. குமார் மைதானத்தில் விளையாடினான்.

வாசிக்கும் போது ஒவ்வொரு வாக்கியமும் நிறுத்தத்துடன் படிக்கப்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாகவும் முற்றுப்புள்ளி அமைகின்றது.

02. காற்புள்ளி (,)

சொற்களைத் தனித்தனியாகவோ, அடுக்கடுக்காகவோ பிரிக்கும் போது **காற்புள்ளி** இடல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும்.
2. குமார், பாபு, கமல் ஆகியோர் இணைபிரியாத நண்பர்கள்.
3. பிரதான வீதி, இரத்தினபுரி.

03. வினாக்குறி (?)

ஒரு வாக்கியம் **வினா வாக்கியமாக** இருப்பின் அவ்வாக்கியத்தின் இறுதியில் **வினாக்குறி** இடப்படல் வேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. மாமா வந்தாரா?
2. நீங்கள் சாப்பிட்டீர்களா?
3. உனது பெயர் என்ன?

www.ikedu.lk

பயிற்சிகள்

01.பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான கருத்தினை கண்டுபிடித்து எழுதுக.

ஒலி		நிறை	
விளா		ஊண்	
நிரை		கனை	
வாணம்		ஒளி	
கறி		வானம்	

02.பொருத்தமான சொற்களுடன் தொடர்பு படுத்துக.

1. வழி — தர்மம்
2. கிலி — கற்பாறை
3. பறவை — உள்நாக்கு
4. அறம் — பாதை
5. ஆனி — தொழில்
6. மழை — கடல்
7. பணி — பயம்
8. பாறை — பட்சி
9. அண்ணம் — ஒரு மாதம்
10. பரவை — மாரி

www.lkedu.lk

03.பின்வரும் சொற்களின் கருத்துப் புலப்பட வாக்கியம் அமைக்குக.

- வால் - .....
- வாள் - .....
- வாழ் - .....

- கரி - .....
- கறி - .....

- பானம் - .....
- பாணம் - .....

- மலை - .....
- மழை - .....

- பரவை - .....
- பறவை - .....

- வானம் - .....
- வாணம் - .....

04.பின்வரும் அட்டவணையை நிரப்புக.

ஒத்தகருத்துச் சொற்கள்

அரசன்	-	.....	ஒளி	-	.....
ஆறு	-	.....	.....	-	தெரு
.....	-	தேசம்	.....	-	கதிரை
.....	-	சமுத்திரம்	விளக்கு	-	.....
ஆகாயம்	-	.....	.....	-	வாவி

www.lkedu.lk

05. பொருத்தமான சொற்களை இணம்கண்டு அட்டவணையை நிரப்புக.

எதிர்க்கருத்துச் சொற்கள்	
இயற்கை	
	துன்பம்
தொடக்கம்	
	தீமை
ஒற்றுமை	
	பழைமை

06. பொருத்தமான சொற்களை இணம்கண்டு அட்டவணையை நிரப்புக.

ஒத்தகருத்துச் சொற்கள்

1. அரசன் -
2. ஆறு -
3. நாடு -
4. கடல் -
5. ஆகாயம் -
6. ஒளி -
7. வீதி -
8. சூரியன் -
9. விளக்கு -
10. குளம் -

நதி	மன்னன்	சமுத்திரம்	தேசம்	கதிரவன்
தெரு	தீபம்	வாவி	வானம்	வெளிச்சம்

www.lkedu.lk

07.கீழுள்ள அட்டவணையை நிரப்புக.

ஒருமை	பன்மை
முள்	.....
.....	பாவைகள்
கூட்டம்	.....
.....	வண்ணங்கள்
கனி	.....
.....	கற்கள்
விமானம்	.....

08. ஒருமை பன்மை சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

1. காகம் கரைந்தது.
   ..... கரைந்தன.

2. ..... வேகமாக ஓடியது.
   மான்கள் வேகமாக ஓடின.

3. தம்பி பாடம் படித்தான்.
   ..... பாடம் படித்தனர்.

4. நாளை பாடசாலை ஆரம்பமாகும்.
   நாளை ..... ஆரம்பமாகும்.

5. நான் ..... வாசித்தேன்.
   நான் புத்தகங்கள் வாசித்தேன்.

6. துலக்ஷிகா செடிக்கு நீர் ஊற்றினாள்.
   துலக்ஷிகா ..... நீர் ஊற்றினாள்.

7. மாணவன் பாடம் படித்தான்.
   .....

8. .....
   பறவைகள் இரை தேடிப் பறந்தன.

www.lkedu.lk

9. காற்றினால் மரம் சரிந்து விழுந்தது.
……..

10. ……
நாங்கள் கண்காட்சியைப் பார்வையிட்டோம்.

11. நீ நாளை வருவாயா?
……

12. ……
நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?

09. பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

ஆண்பால்	பெண்பால்	ஆண்பால்	பெண்பால்
அப்பா	……..	……..	தாய்
……..	மாமி	நண்பன்	……
சிறுவன்	……	……	மருமகள்
……	பாட்டி	ஆண்கள்	……
வேடன்	……	……	மாணவி
……	கிழவி	அரசன்	……..
பாடகன்	……	……	சகோதரி

10. பின்வரும் ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் ஒரு பாடகன்.
……

2. அவர் என்னுடைய பேரன்.
……..

3. நான் சிறந்த நடிகன்.
……..

www.ikeou.lk

4. அவரது மகன் வீட்டிற்கு வந்தார்.
   ……..

5. எனது பெரியப்பா வீட்டிற்கு வந்தார்.
   ……..

6. உழவன் வயலில் வேலை செய்தான்.
   ……..

7. வேடன் காட்டில் வசித்தான்.
   ……

11. பின்வரும் வாக்கியங்களில் தடித்த சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளைச் சேர்த்து மீண்டும் எழுதுக.

1. **வெளவால்** மரக்கிளையில் தொங்கியது.
   ……

2. பாலன் **சட்டை** அணிந்தான்.
   ……

3. **புறாக்கள்** பறந்தன.
   ……

4. சங்கரன் **தொப்பி** அணிந்தான்.
   ……

5. கடையில் **பேனா** வாங்கினாள்.
   ……

12. கீழுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான எழுவாய் அடைமொழிகளையும், பயனிலை அடைமொழிகளையும் எழுதுங்கள்.

1. …… வண்டு தேனை …….. குடித்தது.
2. …….. கோழி தானியங்களை …… தின்றது.
3. …… காற்று …….. வீசியது.
4. …… நாய் …….. ஓடியது.

www.ikedu.lk

5. ..... யானை ..... நடந்தது.
6. ..... மரம் ..... விழுந்தது.
7. ..... சிறுமி ..... ஆடினாள்.
8. ..... பேருந்து ..... வந்தது.
9. ..... மனிதன் ..... விழுந்தான்.
10. ..... பூக்கள் ..... மணம் வீசின.

13. **கீழுள்ள வாக்கியங்களை அவதானிக்குக.**

நேற்று	**சித்திரம்**	**வரைந்தேன்.**
இன்று		**வரைகிறேன்.**
நாளை		**வரைவேன்.**

1. **நேற்று சித்திரம் வரைந்தேன். (இறந்தகாலம்)**
2. **இன்று சித்திரம் வரைகிறேன். (நிகழ்காலம்)**
3. **நாளை சித்திரம் வரைவேன். (எதிர்காலம்)**

- **மேலுள்ள எடுத்துக்காட்டிற்கு அமைவாக வாக்கியம் அமைப்போம்.**

1.

நேற்று	**பாடம்**	**படித்தேன்.**
இன்று		**படிக்கிறேன்.**
நாளை		**படிப்பேன்**

.....
.....
.....

www.ikdu.lk

14. பின்வரும் அட்டவணையை நிரப்புக.

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
குரைத்தது	.....	.....
.....	ஆடுகிறது	.....
.....	.....	வருவார்கள்
பிடித்தது	.....	.....
.....	வீசுகிறது	.....
.....	.....	இடும்
வைத்திருந்தாள்	.....	.....
.....	செல்கிறது	.....

15. கீழ்வரும் சொற்கள் என்ன காலம் என்பதனை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. வரைவேன் - .....
2. பெய்தது - .....
3. ஆடின - .....
4. பறித்தேன் - .....
5. அமர்வோம் - .....
6. பார்க்கிறான் - .....
7. வருவோம் - .....
8. நடிக்கிறாள் - .....
9. வெட்டுவார்கள் - .....
10. உட்கொள்கின்றன - .....

16. கீழ்வரும் சொற்கள் உணர்த்தும் காலங்களை வைத்து வாக்கியம் அமைக்க.

1. கூறினார் - .....
.....

2. செல்வேன் - .....
.....

www.lkedu.lk

3. பாடும் - .....
.....

4. கட்டுகிறாள் - .....
.....

5. வாசிப்பார்கள் - .....
.....

17. பின்வரும் வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாகவும் எதிர்கால வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக.

1. பாமா பாடல் பாடினாள்.
.....
.....

2. பறவைகள் வானில் வட்டமிட்டன.
.....
.....

3. பாத்திமா பரீட்சை எழுதினாள்.
.....
.....

4. சிங்கம் மானை வேட்டையாடியது.
.....
.....

5. புகையிரதம் நேற்று புறப்பட்டது.
.....
.....

6. ஆசிரியர் நேற்று பாடம் நடத்தினார்.
.....
.....

www.lkedu.lk

18. கீழ்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

1. வீட்டை தூய்மையாக வைத்திருப்போம்
2. மா பலா வாழை என்பன முக்கனிகள் ஆகும்
3. நேற்று மழை பெய்ததா
4. உங்கள் ஊர் எது
5. சிங்கம் புலி கரடி என்பன காட்டு விலங்குகளாகும்
6. மீன்கள் நீரில் வாழும்
7. வெளவால் முலையூட்டி பறவையாகும்
8. நான் தோட்டத்தில் மல்லிகை ரோசா தாமரை அல்லி மலர்களைப் பார்த்தேன்
9. எமது நாட்டின் தேசிய பறவை எது
10. கொதித்தாறிய நீரையே பருகுவோம்

19. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

முற்றுப்புள்ளி (.)	காற்புள்ளி (,)	வினாக்குறி (?)

உலகில் நிமிடத்திற்கு நிமிடம் பல சம்பவங்கள் நிகழ்கின்றன□ எல்லாவற்றையும் நாம் அறிய முடிவதில்லை□ ஆயினும் முக்கிய நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும்□ அவற்றை எப்படி அறிந்து கொள்கின்றோம்□ பத்திரிகை□ வானொலி□ தொலைக்காட்சி□ இணையம்□ போன்றவற்றின் ஊடாக அறிந்து கொள்கின்றோம்□

www.lkedu.lk

20. “எழுதுவதும் அழிப்பதும்” பாடத்திலுள்ள முற்றுப்புள்ளி, வினாக்குறி அடங்கிய வாக்கியங்கள் மூன்று வீதம் எழுதுக.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....

21. கீழ்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

முற்றுப்புள்ளி (.)	காற்புள்ளி (,)	வினாக்குறி (?)

1. அப்பா என்னை அழைத்துச் சென்றார்
2. மரப் பொந்துகளில் கிளிகள் வாழ்கின்றன
3. இவை பழங்கள் விதைகள் பூக்களின் மொட்டுகள் போன்றவற்றை உண்கின்றன
4. கிளியின் அலகு பலம் வாய்ந்தது
5. இது ஒரு வேலையா
6. நீலத் தொட்டி எதற்கு
7. மரங்கொத்தி பூச்சிகள் பழங்கள் விதைகள் என்பவற்றை உண்ணுகின்றது
8. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன
9. உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா
10. செம்மஞ்சள் தொட்டி எதற்கு

www.ikedu.lk

- பின்வரும் பாடல்களை இனிமையாக பாடுக.

1.

பாவைப்பிள்ளை

சின்னச் சின்னப் பாவை
சீருடைய பாவை
அன்னை தந்த பாவை
அன்பு கொண்ட பாவை

என்னைப் போலக் காலும்
என்னைப் போலக் கையும்
இனிய கண்ணும் விரலும்
இயைந் திருக்கும் பாவை

சட்டை இட்டுப் பார்ப்பேன்
தொப்பி இட்டுப் பார்ப்பேன்
பொட்டு மிட்டுப் பார்ப்பேன்
பூவணிந்து பார்ப்பேன்

என் மடியிலிருக்கும்
என் அருகிற் படுக்கும்
என்னுடனே பகலும்
இரவும் ஒன்றாய் இருக்கும்.

முதுதமிழ் புலவர் மு. நல்லதம்பி

www.lkedu.lk

2.

மழையே மழையே

சிலு சிலு சிலுவென மழை
சிரிக்க வைப்பது மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை

மழை மழை இனியது மழை
மகிழ்ச்சி தருவது மழை
மலர்களை நனைப்பது மழை
மண் வாசனை தருவது மழை

தட தட தடவென மழை
தண்ணீர் பெருக்கிடும் மழை
செடி கொடி மரங்களில் மழை
செம்மண் பரப்பிலும் மழை

பரந்த கடலிலும் மழை
பாழும் கிணற்றிலும் மழை
பெரிதும் சிறிதும் மழை
பிரித்துப் பார்க்குமோ மழை

- செல்ல கணபதி

www.ikedu.lk

3.

பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய வெள்ளைப் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
களிப்பைத் தரும் பூக்கள்

காற்றில் ஆடும் பூக்கள்
கவிஞர் பாடும் பூக்கள்
கொத்துக் கொத்துப் பூக்கள்
கொள்ளை அழகுப் பூக்கள்

மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்
அன்பைத் தரும் பூக்கள்
அழகுச் சிவப்புப் பூக்கள்.

- வி.என்.எஸ். உதயசந்திரன்

www.lkedu.lk

4.



கதைப் பாடல்

அப்பா என்னை
அழைத்துச் சென்றார்
அங்கு ஓரிடம்

அங்கிருந்த
குயிலும் மயிலும்
ஆடித் திரிந்தன.

பொல்லா நரியும்
புனுகுப் பூனை
எல்லாம் நின்றன.

குட்டி மான்கள்
ஒட்டகச் சிவிங்கி
கூட இருந்தன.


குரங்கு என்னைப்
பார்த்துப் பார்த்து
குறுகு றென்றது.


யானை ஒன்று
காதைக் காதை
ஆட்டி நின்றது.

கரடி கூட
உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று!

சிறுத்தை ஒன்று
கோபத்தோடு
சீறிப் பாய்ந்தது!

அங்கு எங்கள்
அருகிலேயே
சிங்கம் நின்றது!





www.ikedu.lk

5. பின்வரும் உலக நீதி வாசகங்களை மனனம் செய்க.
(பாடநூல் பக்கம் - 60, பாடம் - 26)

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. போகவிட்டுப் புறம்சொல்லித் திரிய வேண்டாம்.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
6. மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்
7. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.
8. கருதாமற் காரியங்கள் முடிக்க வேண்டாம்.
9. செய்ந்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.
10. புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்.

மேலுள்ள அடிகளை உறுப்பமைய எழுதுவோம்.

.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....
.....


www.lkeou.lk

6. கீழுள்ள பந்தியை வாசிக்க. "நீர் வளத்தை பாதுகாப்போம்" என்னும் தலைப்பில் சுவரொட்டி ஒன்றை ஆக்குக.

யாருக்கு எவ்வளவு லீற்றர் தண்ணீர் வேண்டும்?

உலகில் தண்ணீருக்கான பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும்தான். பருவநிலை மாற்றத்தால் இந்த ஆண்டு இந்தியாவின் பெரும்பாலான வனவிலங்கு பூங்காக்களில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனைத் தீர்க்க, வனவிலங்கு அதிகாரிகள் மாற்று ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். ஒவ்வொரு விலங்குக்கும் தேவைப்படும் குடிநீர் அளவு மாறுபடும். தினசரி யாருக்கு எவ்வளவு குடிநீர் தேவை எவ்வளவு என்பதைப் பார்ப்போம்.



www.lkedu.lk

சுவரொட்டி

www.lkedu.lk

7. பின்வருவனவற்றை உரத்து வாசிக்குக.

கைகள்



நாங்கள்தான் உங்கள் கைகள்.

நாங்கள் இல்லாமல் உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா?

நாங்கள் வேலை செய்யும்போது சோர்வடைவது கிடையாது.

நாங்கள் தான் எல்லாப் பொருட்களையும் செய்கிறோம்.

மனிதனை மனிதனாக மாற்றியதும் நாங்கள்தான்.

நாங்கள் வாய் பேசாதவர்களுக்கு உதவுகிறோம்.

நாங்கள் கரம்கூப்பி வணக்கம் செலுத்தவும் உதவுகிறோம்.

கைகுலுக்கி அன்பையும் நட்பையும் வெளிப்படுத்துகிறோம்.

www.ikdu.lk

8. பின்வரும் பாடல் அடிகளைப் பூர்த்தி செய்க.

படி 1

சீருடை,	அன்பு,	தந்த

சின்னச் சின்னப் பாவை

..... பாவை

அன்னை ..... பாவை

..... கொண்ட பாவை.

படி 2

கையும்,	கண்ணும்,	போலக்

என்னைப் ..... காலும்

என்னைப் போலக் .....

இனிய ..... வாயும்

இயைந்திருக்கும் பாவை.

படி 3

பொட்டு,	பூவணிந்து,	தொப்பி,	பார்ப்பேன்

சட்டை இட்டுப் .....

..... இட்டுப் பார்ப்பேன்

..... மிட்டுப் பார்ப்பேன்

..... பார்ப்பேன்.

www.lkedu.lk

தந்தையை, குருவை, ஒழுக்கம், எண்ணம், என்றும், செய்ய, உண்மை, பணியை, நல்லார், தாயை

மறவாதே

பெற்ற ..... மறவாதே

பேணும் ..... மறவாதே

கற்ற ..... மறவாதே

கடவுள் ..... மறவாதே

கல்வியை ..... மறவாதே

கற்றதை ..... மறவாதே

..... சொல்லை மறவாதே

நாட்டுப் ..... மறவாதே

..... தன்னை மறவாதே

..... பேச மறவாதே.

www.lkedu.lk

அறிவித்தல்கள்

நூலகத்தில் அமைதியைப் பேணுவோம்.

நூலகத்திற்கு வரும்போது அங்கத்துவ அட்டையைக் கொண்டுவரவும்.

நூலகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெறும்.

பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும்.

புத்தகங்களை அனுமதியின்றி வெளியே எடுத்துச் செல்லாதீர்கள்.

அறிவுறுத்தல்கள்

நூலகத்திற்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது.

நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களை சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.

www.ikeou.lk

இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் தண்டப்பணம் அறவிடப்படும்.

நூலகத்தில் உள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள் நுழையலாகாது.

நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்து முடித்ததும் உரிய இடங்களில் வைத்துவிட்டுச் செல்லவும்.

கட்டளைகள்

வாசித்த புத்தகங்களை வலது புறத்திலுள்ள இறாக்கையில் வையுங்கள்.

சிறுவர் நூல்களைப் பார்வையிட இரண்டாம் மாடிக்குச் செல்லுங்கள்.

புத்தகங்களைத் தெரிவு செய்த பின்னர் புத்தக அலுமாரியை மூடிவிடுங்கள்.

அலுமாரியின் கீழ்த்தட்டில் உள்ள புத்தகங்களை எடுக்காதீர்கள்.

www.ikedu.lk

நூலகத்தினுள் உரத்துப் பேசாதீர்கள். அமைதியாக இருந்து வாசியுங்கள்.



இளமைப் பெயர்கள்

இளமைப் பெயர்கள்

1.	அணில் -	பிள்ளை, குஞ்சு	6.	பூனை -	குட்டி, பறழ்
2.	எலி -	குஞ்சு	7.	மான் -	குட்டி, கன்று
3.	குதிரை -	குட்டி	8.	மீன் -	குஞ்சு
4.	குரங்கு -	குட்டி, பறழ்	9.	கரடி -	குட்டி
5.	சிங்கம் -	குட்டி, குருளை	10.	காகம் -	குஞ்சு

www.ikeou.lk

இளமைப் பெயர்கள்

1.	நெல்	நாற்று	6.	கிளி	பிள்ளை
2.	மா	கன்று	7.	மாடு	கன்று
3.	வாழை	குட்டி	8.	ஆடு	குட்டி
4.	கழுகு	பிள்ளை, கன்று	9.	கோழி	குஞ்சு
5.	பனை	வடலி	10.	பாம்பு	குட்டி

பழமொழிகளும் கருத்துக்களும்

- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
  உள்ளத்தின் வெளிப்பாடு.

- அழுதபிள்ளை பால் குடிக்கும்.
  முயற்சி செய்தவர் பயன் பெறுவர்.

- ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
  கோபம் சிந்தனைக்கு இடையூறாக அமையும்.

- ஆனைக்கும் அடி சறுக்கும்.
  பெரியோரும் தவறலாம்.

- ஆழமறியாது காலை விடாதே.
  எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.

- இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
  இளவயதுக் கல்வி நிலைத்திருக்கும்.

www.ikeu.lk

- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
  ஒற்றுமை உயர்வு தரும்.

- கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
  வறுமையிலும் செம்மையாக இருத்தல்.

- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
  உறவுகளைச் சேர்ந்திருப்பது நன்மையானது.

- மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
  கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.

- பொறுத்தார் பூமியாள்வார்.
  பொறுமை வெற்றியைத் தரும்.

- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
  நோயின்றி வாழ்வதே பெரிய செல்வம்.

➢ பின்வரும் காட்சிப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.



www.ikeou.lk

1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....



1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……

www.kedu.lk



1. ……
   ……
2. ……
   ……
3. ……
   ……


➢ **கீழுள்ள படத்தினை அவதானித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**



……
……
……
……
……
……

www.lkedu.lk

➢ பின்வரும் கதைப்படத்தினை அவதானித்து கதையொன்றினை கட்டியெழுப்புக.



ஒளிப்படங்கள்: வி.என்.எஸ்.உதயசந்திரன்

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

➢ **“எனது பொழுதுபோக்கு”** எனும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....

➢ **“எனது அழகான பாடசாலை”** எனும் தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1. .....
   .....
2. .....
   .....
3. .....
   .....

- **கட்டத்திலுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களை பூரணப்படுத்துவோம்.**

அழகாக, இயற்கையுடன், அழகை, அனைவரும், மகிழ்ச்சியுடன்

1. அழகை ..... விரும்புகின்றோம்.
2. நாம் வாழும் வீடு ..... இருக்க வேண்டும்.
3. நம் முன்னோர்கள் ..... வாழ்ந்தார்கள்.
4. நிம்மதியாக ..... வாழ்ந்தார்கள்.
5. மீன் தொட்டியின் ..... இரசியுங்கள்.

www.lkedu.lk

- **பின்வரும் பழமொழிகளின் இடைவெளிகளை நிரப்புக.**

1. அகத்தின் ..... முகத்தில் தெரியும்.
2. அழுதபிள்ளை ..... குடிக்கும்.
3. ஆனைக்கும் ..... சறுக்கும்.
4. ஒன்றுபட்டால் ..... வாழ்வு.
5. கூடி ..... கோடி நன்மை.

- **சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழிகள் ஆக்குவோம்.**

1. மட்டு / புத்தி / ஆத்திரக்காரனுக்கு
   .....
2. விடாதே / காலை / ஆழமறியாது
   .....
3. எழுத்து / கல்வி / சிலையில் / இளமையிற்
   .....
4. பொன்னல்ல / மின்னுவதெல்லாம்
   .....
5. வாழ்வே / குறைவற்ற / நோயற்ற / செல்வம்
   .....

- **பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள் எழுதுக.**

1. யானைகள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. (.....)
2. டொல்பின்கள் மனிதர்களுடன் நட்பாக இருக்க விரும்புகின்றன. (.....)
3. சிங்கங்கள் தனித்தனியாகவே வாழ்கின்றன. (.....)
4. வரிக்குதிரைகள், குதிரை இனத்தைச் சேர்ந்தவை. (.....)
5. வரிக்குதிரைகள் கூட்டமாக வாழ விரும்புவதில்லை. (.....)

www.lkedu.lk

- **கட்டத்திலுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

கடதாசியை, பட்டத்தைக், ஈர்க்கை, வால், நூலைச், திடலுக்கு

1. பட்டம் கட்டுவதற்கு கரீம் ..... எடுத்தான்.
2. முரளி ..... எடுத்து அளவாக வெட்டினான்.
3. மேரி பட்டத்திற்கு ..... செய்தாள்.
4. காந்தன் ஈர்க்குகளினால் ..... கட்டினான்.
5. கரீம் ..... சுற்றினான்.

- **பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றுக.**

1. நான் புத்தகம் வாங்கினேன்.
   .....
2. நான் நாய் வளர்த்தேன்.
   .....
3. நான் மணல் வீடு கட்டினேன்.
   .....
4. நான் குடை வாங்கினேன்.
   .....
5. நான் மாலை கட்டினேன்.
   .....

www.lkedu.lk

விடுகதைகளும் விடைகளும்

12 விடுகதைகள்

1. மனிதன் செய்யாத குடை; மழைக்குப் பிடிக்க முடியாத குடை. அது என்ன?



2. முட்டையிடும். அடைகாக்கத் தெரியாது கூட்டிலே குடியிருக்கும்; கூடு கட்டத் தெரியாது. அது எது?



3. உள்ளே இருந்தால் ஓடித் திரிவான்; வெளியே வந்தால் விரைவில் மடிவான். அவன் யார்?



4. ஒருவனை அழைத்தால் ஊரையே கூட்டுவான். அவன் யார்?



5. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். அது எது?



6. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் அழகாக வலை பின்னும். அது எது?



7. வாசலிலே வண்ணப் பூ. தினம் தினம் மாறும் பூ. தெளிவாகத் தோன்றும் பூ அது என்ன?



www.lkedu.lk

8. ஆயிரம் நூற்பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம். அது என்ன?



9. வால் உண்டு; உயிரில்லை, அங்கும் இங்கும் பறப்பான். அவன் யார்?



10. ஒளி கொடுக்கும்; விளக்கல்ல; சூடு கொடுக்கும்; நெருப்பல்ல. அது என்ன?



11. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து. அது என்ன?



12. வெளியே விரியும்; உள்ளே சுருங்கும் அது என்ன?



13. நெருப்பில் பட்டு சிவந்தவனுக்கு நீண்ட ஆயுள். அவன் யார்?



14. நீர் நிறைந்திருக்கும் நெற்றியிலே கண் இருக்கும். அது என்ன?



15. கத்தியின்றி இலைகளை வெட்டும். அது என்ன?



www.ikeau.lk

➢ கீழுள்ள குறியீடுகளை அவதானித்து அவை குறிக்கும் கருத்துக்களை எழுதுக.








.....
.....
.....
.....
.....

- பின்வரும் கதையினை மௌனமாக வாசியுங்கள்.

உடல் நலம்

குதிரை ஒன்று ஓட்டப் போட்டியில் பங்குபற்றியது.

தனது உடல் நலக் குறைவினால் தோல்வியடைந்தது.

எப்போதும் ஓட்டப் போட்டியில் குதிரை தோற்றதில்லை.

இம்முறை தோல்வி அடைந்தமைக்கு ஆளுக்கு ஆள் காரணம் சொல்ல ஆரம்பித்தனர்.

www.lkedu.lk




ஒரு வெள்ளை முயல் அதன் அருகில் வந்து "குதிரை அண்ணா! நீங்கள் மிக வேகமாக ஓடியிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கலாம்" என்றது.





பாய்ந்து வந்த குரங்கு ஒன்று "குதிரை அண்ணா! நீங்கள் மற்றவர் களுக்கு இணையாக ஓடவில்லை. மற்றவர்களுக்கு உங்கள் வெற்றியை விட்டுக் கொடுத்து விட்டீர்கள்" என்றது.






எங்கிருந்தோ ஓடி வந்த நாய் குதிரை யைப் பார்த்து, "குதிரையாரே! நீங்கள் தான் வெற்றி பெறுவீர்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது என்ற ஆணவத்தில் ஓடினீர்கள். அதனால்தான் தோற்றீர்கள்" என்றது.



இவ்வாறு ஒவ்வொருவரும் குதிரைக்கு அறிவுரை கூறி, தமது ஆதங்கத்தைத் தீர்த்துக்கொண்டனர்.

www.ikeol.lk



மரப் பொந்தில் அமர்ந்திருந்த சிட்டுக்குருவி எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தது. அது பறந்து வந்து குதிரையின் முதுகில் அமர்ந்தது. தனது அலகினால் குதிரையின் முதுகைத் தடவியது. "அண்ணா! உங்களுக்கு அறிவுரை கூற எனக்குத் தகுதியில்லை. ஏனெனில் ஓட்ட வீரரான உங்களுக்கு எப்படி ஓட வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. உங்களுக்கு நல்ல ஆலோசனை ஒன்றைக் கூறுவதற்கு அனுமதி தருவீர்களா?" என்று கேட்டது.

இதுவரை முயல், குரங்கு, நாய் ஆகியவற்றின் கருத்துக்களால் குதிரை மனமுடைந்திருந்தது. சிட்டுக்குருவியின் பேச்சு ஆனந்தத்தைத் தந்தது.

"சிட்டுக்குருவியே நீ என் மனமறிந்து பேசுகிறாய். உன் ஆலோசனை எனக்கு அவசியம். எனவே தயக்கமின்றிக் கூறு" என்றது.

"அண்ணா! எந்த ஒரு வீரனுக்கும் உடலும் உள்ளமும் எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும். உங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. உங்கள் தோல்விக்கு அதுவே காரணம். உடல் நலம் பாதிக்கப்பட்டால் உள்ளமும் பாதிக்கப்படும். இனி நீங்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். தோல்வியைக் கண்டு துவண்டு விடாதீர்கள். உங்கள் தோல்விக்கான காரணம் உடல் நலக் குறைவுதான். உடல் நலம் சரியானால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்" என்று கூறிவிட்டு சிட்டுக்குருவி பறந்து சென்றது.

- **மேலுள்ள கதையின் மூலம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் படிப்பினை யாது?**

.....

.....

.....

.....

.....

.....

.....

www.ikeou.lk

மேலதிக பயிற்சிகள்

1. உயிர் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை ஒழுங்கு முறையாக எழுதுக?

.....

.....

2. மெய் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை ஒழுங்கு முறையாக எழுதுக?

.....

.....

3. தரப்பட்ட சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுவோம்.


ஒருமை	பன்மை
குரங்கு	.....
வண்ணத்துப்பூச்சி	.....
பறக்கின்றது	.....
கல்லை	.....
ஓடியது	.....
பாடசாலையில்	.....
பாடத்தை	.....

4. பொருத்தமான சொற்களுடன் இணைக்குக.

01. அவன்	பாடினாள்
02. பாடம்	வரைந்தேன்
03. சித்திரம்	நடித்தான்
04. சீதா	விளையாடினர்
05. மாணவர்கள்	படித்தார்கள்

www.ikedu.lk

5.



- **மேலுள்ள படத்தில் நீங்கள் அவதானிக்கக்கூடிய மிருகங்களின் பெயர்களை எழுதுக.**

  .....

  .....

  .....

- **மேலுள்ள படத்தினை அவதானித்து நிகழ்காலத்தில் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.**

  உதாரணம் -

  குரங்குகள் மரத்தில் தாவி விளையாடுகின்றன.

  .....

  .....

  .....

  .....

  .....

www.ikeda

6. பின்வரும் சொற்களின் கருத்துக்களைத் தெரிந்து எழுதுக.

மனம்		மணம்	
வானம்		வாணம்	
அளகு		அழகு	
வழி		வளி	
பலம்		பழம்	
பரவை		பறவை	

கனி, காற்று, மத்தாப்பு, ஆகாயம், பாதை, வாசனை, கடல், உறுதி, பட்சி, கோழி, உள்ளம், வனப்பு

7. கட்டத்திலுள்ள எழுத்துக்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

ன, ண, ல, ள, ழ, ர, ற

1. நூ....கம்
2. உ.....வகம்
3. கி....ங்கு
4. உ.....க்கம்
5. பள்....ம்
6. உ.....வன்
7. இ....க்கம்
8. விமா....ம்
9. ப....வைகள்
10. க....ங்கள்

8. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான அடைமொழிகளை வைத்து மீண்டும் எழுதுக.

1. கொக்கு .....
2. குடை .....
3. தாமரை .....
4. தொப்பி .....
5. பென்சில் .....

9. கட்டத்திலுள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துங்கள்.

ன, ண, ல, ள, ழ, ர, ற

- நூ....கம்
- உ....வகம்
- கி....ங்கு
- உ....க்கம்
- பள்...ம்
- உ....வன்
- இ...க்கம்
- விமா....ம்
- ப...வைகள்
- க...ங்கள்

10. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க


1. சூரியனது ..... உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது. (ஒளி, ஒலி, ஒழி)
2. பாடசாலையின் முதலாவது மணி ..... சில நிமிடங்களின் முன்னர் கேட்டது. (ஒளி, ஒலி, ஒழி)
3. சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி .....ந்தன. (ஒளி, ஒலி, ஒழி)
4. காடுகளை .....ப்பதால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது. (அலி, அளி, அழி)
5. இந்தப் பூமியைச் சுற்றி ..... மண்டலம் உள்ளது. (வலி, வளி, வழி)
6. சுற்றுலாப் பயணி ஒருவர் கண்டிக்குச் செல்லும் ..... (வலி, வளி, வழி) எதுவெனக் கேட்டார்.

www.lkedu.lk

11.பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.

1. ..... மைதானத்தில் விளையாடினார்கள். (சிறுவன், சிறுவர்கள்)
2. பறவைகள் வானில் ..... (பறந்தன, பறந்தது)
3. பூக்கள் மலர்ந்து மணம் .....(வீசியது, வீசின)
4. குதிரை வேகமாக ..... (ஓடுகின்றன, ஓடுகிறது)
5. மாணவர்கள் பாடம் ..... (படித்தனர், படித்தான்)

12. பின்வரும் சுயவிபரப் படிவத்தினை நிரப்புக.



www.ikeou.lk

- தரம் நான்கில் நாம் கற்க வேண்டியதன் சிறு தொகுப்பு

ஒத்தகருத்துச் சொற்கள்

அழகு	-	வடிவு, வனப்பு	சினம்	-	கோபம், சீற்றம்
அறிவு	-	ஞானம், புத்தி	சுத்தம்	-	தூய்மை, புனிதம்
உடல்	-	மெய், சரீரம்	துன்பம்	-	துக்கம், இடர்
உண்மை	-	சத்தியம், வாய்மை	நித்திரை	-	துயில், உறக்கம்
களிப்பு	-	உவகை, மகிழ்ச்சி	உணவு	-	ஆகாரம், உண்டி

எதிர்க்கருத்துச் சொற்கள்

1.	அண்மை	-	சேய்மை	7.	ஏற்றுமதி	-	இறக்குமதி
2.	ஆக்கம்	-	அழிவு	8.	ஒளி	-	இருள்
3.	இலாபம்	-	நட்டம்	9.	சாதகம்	-	பாதகம்
4.	இளமை	-	முதுமை	10.	ஞாபகம்	-	மறதி
5.	உயர்வு	-	தாழ்வு	11.	நண்பன்	-	பகைவன்
6.	உறவு	-	பகை	12.	சுத்தம்	-	அசுத்தம்

எதிர்ப்பாற் சொற்கள்

1.	சிறுவன்	-	சிறுமி	7.	பண்டிதன்	-	பண்டிதை
2.	செல்வன்	-	செல்வி	8.	சீமான்	-	சீமாட்டி
3.	சேவகன்	-	சேவகி	9.	நாயகன்	-	நாயகி
4.	தம்பி	-	தங்கை	10.	மாணவன்	-	மாணவி
5.	புத்திரன்	-	புத்திரி	11.	வீரன்	-	வீராங்கனை
6.	நண்பன்	-	நண்பி	12.	மருமகன்	-	மருமகள்

www.ikedu.lk

• கதைகள்

சேவகனின் ஆழ்ந்த சிந்தனை

ஒர் அரசரிடம் சேவகன் ஒருவன் வேலை செய்து வந்தான். அவனுக்குச் சுயமாக சிந்திக்கத் தெரியாது. ஒரு நாள் அரசர் அவனுடன் வெளியூர் சென்றார். வழியில் இருட்டி விட்டது. எனவே அங்கிருந்த ஒரு சத்திரத்தில் தங்க முடிவு செய்தார்.

சேவகன், குதிரையை வெளியில் உள்ள ஒரு மரத்திற் கட்டினான். அரசர் சேவகனிடம், "இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் குதிரையைப் பார்த்துக் கொள்" என்றார்.

சேவகன் "அரசே! இரவு முழுவதும் எப்படி நித்திரை கொள்ளாமல் இருப்பது" என்று கேட்டான். அரசரும் "ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சினை பற்றிச் சிந்தித்துக் கொண்டிரு. நித்திரை வராது" என்றார். அவனும் சரி என்றான்.

அவன் என்ன செய்கிறான் என்பதைச் சோதிக்க அரசர் விரும்பினார். சிறிது நேரம் கழித்து அங்கே வந்தார். அரசர் சேவகனைப் பார்த்து, "இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். "அரசே, நான் நித்திரை கொள்ளவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்ததா? அல்லது யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."என்றான்.

நல்லது என்று கூறிச் சென்ற அரசர், நள்ளிரவில் மீண்டும் வந்தார். அரசர் சேவகனைப் பார்த்து, "இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். "அரசே, கடலில் உப்பு தானாக வந்ததா? அல்லது யாரேனும் கொண்டு வந்து கொட்டினார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."என்றான்.

அரசரும் நிம்மதியுடன் நித்திரைக்குச் சென்றார். காலையில் எழுந்து வந்து சேவகனைப் பார்த்தார். சேவகன் ஆழ்ந்த யோசனையுடன் இருப்பதைக் கண்டார். அரசர் மகிழ்ச்சி அடைந்தார். அரசர் சேவகனைப் பார்த்து, "இப்போது என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன் "அரசே, உங்கள் குதிரை தானாக ஓடி விட்டதா? அல்லது யாரேனும் திருடிச் சென்று விட்டார்களா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்." என்றான்.

அரசர் அதிர்ச்சி அடைந்தார்.

www.keou.lk

நன்றி




புள்ளிமான் ஒன்று தண்ணீர் குடிப்பதற்காக ஏரிக்குச் சென்றது.

அங்கே, தண்ணீரில் மிதந்து தத்தளித்துக் கொண்டிருந்த கட்டெறும்பைக் கண்டது.

கட்டெறும்பு புள்ளிமானைப் பார்த்து தன்னைக் காப்பாற்றும்படி கேட்டது.

இரக்கப்பட்ட புள்ளிமான் தன் காலைத் தண்ணீரில் மிதந்த கட்டெறும்பின் அருகில் வைத்தது.

கட்டெறும்பு மானின் காலில் ஏறிக் கரையேறியது.



கரையேறிய சில நிமிடங்களுக்குள் கட்டெறும்பு, புள்ளிமானின் காலைக் கடித்தது.

புள்ளிமான் வலி தாங்க முடியாமல் அவ்விடத்தை விட்டு வேகமாக ஓடியது.

புள்ளி மானுக்கு கட்டெறும்பு கடித்ததற்கான காரணம் புரியவில்லை.

சிறிது நேரத்தின் பின்னர் புள்ளிமான் நிற்கும் இடத்தைக் கட்டெறும்பு சென்றடைந்தது.

புள்ளிமான் கட்டெறும்பைப் பார்த்து "உன்னைக் காப்பற்றியதற்கு நீ எனக்கு காட்டிய நன்றிக்கடன் இதுதானா?" என்று பரிதாபக் குரலில் கேட்டது.

அதற்குக் கட்டெறும்பு "நான் அந்த அளவுக்கு மோசமானவன் இல்லை. எனக்கும் நன்றி உண்டு. நான் உன்னைக் கடித்திருக்காவிட்டால் நீ இவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கமாட்டாய். அருகிலிந்த புதரில் மறைந்திருந்த சிறுத்தைப்புலி உன்னைப் பிடித்திருக்கும்!" என்று கூறியது.

புள்ளிமான் கட்டெறும்பைப் பார்த்து "உன் மனதை புண்படுத்தியதற்காக மன்னித்துக் கொள். என்னைக் காப்பற்றியதற்கு எனது மனமார்ந்த நன்றி கள்" என்று சோகமாகக் கூறியது.

மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த கட்டெறும்பு **"என்னைத் தண்ணீரில் இருந்து காப்பற்றியதற்கு இதயங்கனிந்த நன்றிகள்"** என்று கூறி விடைபெற்றுச் சென்றது.

www.kedu.lk

- **உரையாடல்**

உரையாடல் அட்டை

(தாத்தா பேரன் உரையாடல்)

தாத்தா : ஏதோ கேட்க வேண்டும் என்றாயே கேள்.

பேரன் : காகிதத்தைக் கண்டு பிடித்தது யார் தாத்தா?

தாத்தா : காகிதம் சீனாவில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. காகிதத்தைக் கண்டறிந்தவர் யார் என்று கேட்டால், ஒருவருடைய பெயரைச் சொல்வது சிரமம்.

பேரன் : ஏன் தாத்தா?

தாத்தா : சீனாவில் பல தலைமுறைகளில் வெவ்வேறு நபர்கள் முதன் முறையாகத் தயாரித்திருக்கின்றார்கள் என்கிறார்கள். இவர்களுள் தனித்துவமாகத் தெரியும் பெயர் சாய்லூன்.

பேரன் : புரியும்படி சொல்லுங்கள் தாத்தா.

தாத்தா : சாய்லூனுக்கு முன்பே காகிதத்தை யாராவது அரைகுறையாகக் கண்டு பிடித்திருக்கலாம். ஆனால் பரவலாக இன்று பயன்படுத்தப்படும் காகிதத் தயாரிப்பு வழிமுறைகளை முதலில் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர் சாய்லூன் அவர்களே.

பேரன் : சாய்லூன் எப்படிக் காகிதத்தைத் தயாரித்தார் தாத்தா.

தாத்தா : மரப்பட்டைகளை மிகச் சிறிய துண்டுகளாக வெட்டிக் கொண்டார். அத்துடன் சில குறிப்பிட்ட செடிகளை மட்டுமல்ல கிழிந்த துணிகளை எல்லாம் போட்டுத் தண்ணீர் சேர்த்து நன்றாகக் அரைத்துக் கூழாக்கினார்.

பேரன் : கூழாக்கி என்ன செய்தார் தாத்தா?

தாத்தா : அதைத் தோசை போல் தட்டையாக ஊற்றிப் பரவலாக்கி மேலே நன்கு அழுத்தி ஈரப்பதத்தை நீக்கினார்.

பேரன் : அதற்குப் பிறகு என்ன செய்தார் தாத்தா?

தாத்தா : வெயிலில் காய வைத்தார். காகிதம் தயார்.

பேரன் : அதன் பிறகு அந்தக் காகிதங்கள் சீனாவிலிருந்து உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவத் தொடங்கியதா தாத்தா?

தாத்தா : அவை ஐரோப்பாவை வந்தடைந்ததன் பின்பு மிகப்பெரிய புரட்சியைக் கொண்டு வந்தது.

பேரன் : இன்று காகிதத்தைப் பற்றி அறிந்து கொண்டேன். நன்றி தாத்தா.

www.ikeduk

- **பாடல்கள்**



வெண்ணிலா

இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே
இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே

சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே
தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே

தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே
தனிவிசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே

பெண்கள் முகம் போல்வருவாய் வெண்ணிலாவே
பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே

எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே
எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே

வளர்ந்துபின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே
வறுமைசெல்வ முனக்குமுண்டோ வெண்ணிலாவே

ஒரு நாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே
ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே

அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே
அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே

- க. சோமசுந்தரப் புலவர்

www.ikeu.lk

சின்னச் சின்னப் பறவை



சின்னச் சின்னப் பறவையான
சிட்டுக்குருவி,
தேடித்தேடித் திரிவதென்ன?
சிட்டுக்குருவி.
என்ன வேண்டும்? என்ன வேண்டும்?
சிட்டுக்குருவி.
என்னிடம்நீ சொல்லவேண்டும்
சிட்டுக்குருவி.



உணவுதேடித் திரிகின்றாயோ?
சிட்டுக்குருவி.
ஊக்கமது கைவிடாத
சிட்டுக்குருவி.
பணமும் வேண்டாம் காசும்வேண்டாம்
சிட்டுக்குருவி.
பச்சைநெல்லை நான்தருவேன்,
சிட்டுக்குருவி.



கூடுகட்டி வாழ்வதற்கு
சிட்டுக்குருவி.
குச்சிகளைத் தேடுகின்றாயா?
சிட்டுக்குருவி.
பாடுபட்டு வேலைசெய்ய,
சிட்டுக்குருவி.
பாடமெல்லாம் கற்றுத்தரும்
சிட்டுக்குருவி.



வீட்டுக்குள்ளே எந்தஇடம்
சிட்டுக்குருவி.
வேண்டுமோநீ சொல்லிடுவாய்
சிட்டுக்குருவி.
கூட்டைஅங்கே கட்டிக்கொள்வாய்
சிட்டுக்குருவி.
கொடுக்கவேண்டாம் வாடகையும்
சிட்டுக்குருவி.



கூட்டைநாங்கள் கலைக்கமாட்டோம்
சிட்டுக்குருவி.
குஞ்சுகளைத் தொடவுமாட்டோம்
சிட்டுக்குருவி.
சேட்டையொன்றும் செய்யமாட்டோம்
சிட்டுக்குருவி.
திண்ணம்இது திண்ணமாகும்
சிட்டுக்குருவி.

- **அழ. வள்ளியப்பா**

www.ikeeth.lk

பிராணிகளின் கொண்டாட்டம்

சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்

சிலந்தி கட்டும் வெள்ளை
குரங்கு கட்டும் மாலை

ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்

கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்

பாட்டுப் பாடும் குயில்கள்
நாட்டியம் ஆடும் மயில்கள்

பன்னீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொடுக்கும் பூனை

மான்கள் பாயை விரிக்கும்
முயல்கள் அழைத்துச் சிரிக்கும்.

www.lkedu.lk

நுங்கு வண்டி

சின்னச் சின்ன நுங்கு
செங்க ரும்பு நுங்கு
தின்னத் தின்ன இனிக்கும்
திகட்டி டாத நுங்கு!

தாகம் தீர்க்கும் நுங்கு
தண்ணீர் போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு!

நுங்கை வெட்டித் தின்றேன்
நுங்கு வண்டி செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
நுட்பம் ஒன்றைக் கண்டேன்!

- செல்ல கணபதி

நன்றி : பிறந்தநாள்

www.lkedu.lk

எங்கும் கேட்டிடலாம்




ஓரிடத்தில் இருந்திடாமல்
ஓடி ஓடிக் கேட்டிடலாம்.
பாடகரைப் பார்த்திடாமல்
பாட்டுக்களைக் கேட்டிடலாம்.





வாத்தியங்களை இசைத்திடாமல்
வாத்திய இசை கேட்டிடலாம்
ஊரெங்கும் போய் வராமல்
ஊர்ப் பதினம் கேட்டிடலாம்.





அறிஞர்களைச் சந்திக்காமல்
அறிவுரைகள் கேட்டிடலாம்.
உலகமெங்கும் சுற்றிடாமல்
உலகச்செய்தி கேட்டிடலாம்





விழாக்களுக்குச் சென்றிடாமல்
வர்ணனைகள் கேட்டிடலாம்
கேட்டிடலாம் கேட்டிடலாம்
கேட்டுக்கொண்டே இருந்திடலாம்



- **வி.என்.எஸ்.உதயசந்திரன்**

www.ikedu.lk

நன்றி